நகர்மன்றம்
உதகமண்டலம்
**26–11–2020.**

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற நவம்பர் **–2020–**ம் மாத அவசரக்கூட்டம் வருகிற **26–11–2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சியில் கோடப்பமந்து வாய்காலில் பாதாள சாக்கடை திட்டத்தில் பதிக்கப்பட்ட கழிவு நீர் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ. **500.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு **2019–2020** ஆம் ஆண்டிற்கான CGF திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**17845/2019**/UHSS.1/ நாள் 27.09.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீட்டிற்கு முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க. எண் **2829/2016** /DOI நாள் **29.08.2019**ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் L1 ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகன் , திருச்சி என்பவர் மதிப்பீட்டினை விட **9.94** சதவீதம் கூடுதல் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை ஏற்க தலைமைப் பொறியாளர் தலைமையிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு குழுவின் **13.03.2020**ம் தேதிய திட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு மன்றதீர்மான எண் **1976** நாள் **17.03.2020**ன் அனுமதிக்கப்பட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடித எண் ந,க.எண். **4735/2019/**இ**4** நாள் **16.06.2020** ன்படி பணி ஆணை வழங்கப்பட்டு அன்றைய தினமே பணிக்கான ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது,

மேற்படி பணிக்கான ஒப்பந்ததாரர் பணியினை துவக்கி கோடப்பமந்து வாய்க்காலில் தூர் வாரும் பணியை துவங்கி நடைபெற்று வந்த நிலையில் பழுதான கழிவு நீர் குழாய்களை மாற்றும் பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்துள்ள **450** எம்..எம். விட்டமுள்ள DI K9 பைப்புகள் . **500** மீட்டர் நீளம் மற்றும் **600** எம்.எம் விட்டமுள்ள DI K9 பைப்புகள்– **1000** மீட்டர் நீளம் கொள்முதல் செய்து சப்ளை செய்யும் பணியில் DI K9 பைப்புகளுக்கு பதில் DI K7 பைப்புகளை கொள்முதல் செய்து சப்ளை செய்ய தனது **17.11.2020** ஆம் தேதிய கடிதத்தில் தயாரிப்பு கம்பெணிகளில் தற்போது K9 பைப்புகள் கிடைக்கப்பெரிவது அரிதாக உள்ளதால் பணியினை முடிக்க வேண்டி K7 பைப்புகளை சப்ளை செய்வதற்கும், சப்ளை செய்த K7 பைப்புகளை ஏற்று பதிப்பதற்கு அனுமதியும் அதற்கான உரிய தொகையினை வழங்குமாறு கேட்டுள்ளார்.

கோடப்பமந்து வாய்காலில் பழுதான கழிவுநீர் குழாயினை எடுத்து விட்டு புதிய கழிவுநீர் குழாய்கள் அமைக்க வாய்க்காலின் தரைப்பரப்பினை டோபோகிராபிகள் சர்வே எடுத்து பார்த்ததில் கழிவுநீர் குழாய் மாற்றி அமைக்கப்படும் இடமான நகர பேருந்து நிலையம்

முதல் கோத்தகிரி சாலை சர்க்கார் மார்க்கெட் வரை தரைமட்ட பரப்பின் அளவு வித்தியாசம் (Level Difference) **11.00** மீட்டர் வருவதினால் மேலும் பதிக்கப்படும் கழிவுநீர் குழாய்களில் கழிவுநீர் புவி ஈர்ப்பு விசையினால் (Gravity flow ) கழிவுநீர் செல்வதினாலும் , திடீர் கழிவுநீர் அழுத்தம் குறித்த Surge pressure கணக்கீட்டின் படி மேற்படி பணிக்கு **450** எம்.எம் மற்றும் **600** எம்,எம் DI k7 பைப்புகளை பயன்படுத்தலாம் என்பதால் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கிய முதன்மை தலைமை பொறியாளர் , நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் DI k9 பைப்புகளுக்கு பதில் DI k7பைப்புகளை பயன்படுத்தவும், பணிமாறுதலுக்கு ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்ளவும் , பணிக்கான மதிப்பீட்டில் கோடப்ந்து வாய்க்காலில் கழிவுநீர் குழாய் மாற்றி அமைக்கும் பகுதிக்கு மட்டும் **1.50** மீட்டர் அகலத்திற்கும் தூர் வாரி அப்பகுதியில் கழிவுநீர் குழாய் புதிதாக பதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாய்க்காலின் அகலம் தரைப்பகுதி முழுவதும் தூர் படிந்து உள்ளதாலும் ,

வாய்க்காலின் முழு அகலமும் படிந்துள்ள கழிவுநீர் மற்றும் சகதி மண்ணை அப்புறப்படுத்தினால் தான் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் மேலும் கோடப்மந்து வாய்காலில் சகதி மண் படிந்து கழிவுநீர் சீராக செல்ல இயலாமல் உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் வாய்க்காலின் கொள்ளளவினை மீறி அருகாமையில் உள்ள குடியிருப்புக்குள் மழைநீர் புகுந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தினை ஏற்படுத்துகிறது. மழைக்காலங்களில் ,இது போன்ற நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுகிறது.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கோடப்பமந்து வாய்க்காலில் கழிவு நீர் குழாய் மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ளும் போது வாய்காலில் படிந்துள்ள சகதி மண் முழுவதையும் அப்புறப்படுத்திய பின்னர் தான் பணியினை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கியுள்ளதால் வாய்க்கால் பகுதி முழுவதும் தூர் வாரி அப்புறப்படுத்தும் பணிக்கு தனியார் நிறுவன தொழில் நுட்ப ஆலோசகர் மூலம் வாய்க்காலில் படிந்துள்ள சகதி மண்ணை டோபோகரிபிகல் சர்வே மூலம் சர்வே செய்து அளவீடுகள் எடுத்த வகையில் ஆகும் கூடுதல் அளவுகளுக்கும், அதன் செலவினத்திற்கும் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் ஏற்படும் வித்தியாசம் மற்றும் கூடுதல் பணி குறித்த DI K9 பைப்புகளுக்கு பதிலாக DI K7 பைப்புகளை பயன்படுத்தி அதற்கான தொகையினை வழங்கவும், வாய்க்கால் முழுவதும் தூர் வாரும் பணியினை மேற்கொள்வதினால் ஆகும் கூடுதல் அளவுகள் மற்றும் கூடுதல் செலவின தொகையுடன் சேர்த்து ரூ, **540.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**


**1.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் கோடப்பமந்து வாய்க்காலில் கழிவு நீர் கலந்து உதகை ஏரி மாசுபடுவதை குறித்து நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண் W.P. எண்.**1997 /2019** மற்றும் CMP Nos **13513** மற்றும் **13514 / 2019** வழக்கு நடைபெற்று வரும் நிலையில் கழிவுநீர் குழாய்கள் பழுதடைந்துள்ளதை மாற்றி அமைக்கும் பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டும், கழிவுநீர் குழாய்களில் கழிவு நீர் புவி ஈர்ப்பு விசையினால் ( Gravity Flow) செல்வதினால் மதிப்பீட்டில் வழிவகை செய்த DI K9 பைப்புகளுக்கு பதிலாக DI K7 பைப்புகளை பயன்படுத்தி கொள்ளும் வகையிலும் அதற்குண்டான

தொகையினை உரிய அனுமதி பெற்று வழங்கவும், வாய்க்காலில் முழுவதும் தூர் வாரி அப்புறப்படுத்துவதினால் ஏற்படும் கூடுதல் அளவுகளின்படி ரூ, 540,00 இலட்சத்திற்கு தயார் செய்த திருத்திய மதிப்பீட்டிற்கு உரிய தொழில்நுட்ப அனுமதியினை பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

2. மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீட்டின்படி திட்ட நிதி ஒதுக்கீட்டினைவிட கூடுதல் ஆகும் மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.40.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொளள் மன்றம் அனுமதிக்கலாம்,

3. திருத்திய மதிப்பீட்டின்படி பணிக்குரிய ஒப்பந்ததாரர் மூலமாக கூடுதல் பணிகளை ஒப்பந்த விலை விபரத்தின் அடிப்படையில் அவர்மூலமாகவே பணியினை செய்து முடிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.2395 அனுமதிக்கப்பட்டது**



**ஆணையாளர் மற்றும்**
**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

நகர்மன்றம்
உதகமண்டலம்
**30–11–2020.**

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் நவம்பர்/2020–ம் மாத சாதாரண கூட்டம் வருகிற **30.11.2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். **6** க்கு உட்பட்ட கோத்தகிரி சாலையின் ஒரத்தில் உள்ள விநாயகர் கோவில் பின்புறம் உள்ள நடைபாதையின் ஒரத்தில் உள்ள மழைநீர் கால்வாயில் மழைக் காலங்களில் கோத்தகிரி சாலையில் இருந்து அதிகப்படியான மழைநீர் வருவதால் இந்த கால்வாய் மழைநீரில் அரிக்கப்பட்டு பழுதடைந்தும் இடிந்தும் உள்ளது. இதனால் மழை நீரானது மழைக் காலங்களில் கால்வாய் வழியாக செல்லாமல் நடைபாதையின் வழியாக செல்கிறது. இதனால் பொதுமக்கள் மழைக் காலங்களில் நடைபாதையில் நடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். மேலும் மழைக் காலங்களில் நடைபாதையில் மழைநீர் செல்லும் போது பொதுமக்கள் நடந்து செல்லும் போது வழுக்கி விழும் நிலை உள்ளது. மேற்கண்ட நடைபாதையின் ஒரத்தில் மழைநீர் கால்வாய் புதிதாக அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**5.95/–** இலட்சத்திற்கு பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடலாம்.**
2. **தனி அலுவலர்அனுமதிக்கலாம்**
   **தீர்மான எண்.2396 அனுமதிக்கப்பட்டது**

**2.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**6** ல் அமைந்துள்ள மேல் கோடப்பமந்து உள்ளது. அப்பகுதியில் பெய்த மழையினால் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளது. அந்த நடைபாதையை அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களில் ஒருவர் பயன்படுத்தும் போது கீழே விழுந்து காயம் அடைந்து உள்ளார். இதனால் அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் ஆகியவர்கள் கடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட மேல் கோடப்பமந்து விநாயகர் கோவில் பின் பக்கம் அமைந்துள்ள நடைபாதை மற்றும் தடுப்பு சுவர் அமைப்பது அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.95/–** இலட்சத்திற்கு வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடலாம்.**
2. **தனி அலுவலர்அனுமதிக்காக.**

**தீர்மான எண்.2397 அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் கீழ் **29.11.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட கோடப்பமந்து கால்வாய் **4.50** கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் சீரமைக்க DPR (Desigining Drawing Estimate) தயாரிக்கும் பணி | 4.50 |

<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>திரு. ஆர்.ஆர். ஹரிஷ் அவர்கள் மதிப்பீட்டை விட 0.0% அதிகம்</td><td rowspan="2">திருவாளர் S P T Consultancy Service அவர்கள் மதிப்பீட்டை விட 0.001% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருவாளர் S P T Consultancy Service அவர்கள் மதிப்பீட்டை விட 0.001% குறைவு</td></tr>
</table>

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம். (ந.க.எண் இ5/10195/2019)**

**தீர்மான எண்.2398 அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் **22.11.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மழையினால் சேதமைந்துள்ள சாலைகளை தார் ஒட்டும் பணி | 24.50 |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | திருவாளர் முரளி & கோ அவர்கள் மதிப்பீட்டை விட 0.11% குறைவு | திருவாளர் முரளி & கோ அவர்கள் மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 2 | திரு. ஜி.தாஸ் அவர்கள் மதிப்பீட்டை விட 1.49% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

**1. தனி அலுவலர் ஏற்கலாம்.**
**2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
**(ந.க.எண் இ5/10203/2019)**

**தீர்மான எண்.2399 அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு மூன்றாண்டு குத்தகை 31.03.2021 வுடன் முடிவடைகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் | குத்தகை ஒப்படைக்கப்பட்ட நாள். | குத்தகை மூன்றாண்டு முடிவடையும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி.வெங்கடேஷ் | சந்தை நுழைவு வாயில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2018 | 31.03.2021 |
| 2 | திரு.வி.குமார் | கட்டண கழிப்பிடம் (ஹோபார்ட் பார்க்) | 01.04.2018 | 31.03.2021 |
| 3 | திரு.வி.ஆனந்த் | வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் (மவுண்ட் ஸ்டீவர்டு ரோடு) | 01.04.2018 | 31.03.2021 |
| 4 | திரு.பஷீர் | வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் (காந்தல் முக்கோணம்) | 01.08.2018 | 31.07.2021 |

சட்டமன்ற தேர்தலுக்கான விதிமுறைகளை அமுல்ப்படுத்தப்பட உள் காரணத்தினால் மேற்காணும் இனங்களுக்கு ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் தினசரி நாளிதழ்களில் உரிய விளம்பரம் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

**1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
**2. விளம்பர கட்டணங்களை செலுத்தவும் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண் அ7/10286/2020)**

**தீர்மான எண்.2400 அனுமதிக்கப்பட்டது**

6. இந்நகராட்சியின் தீட்டுக்கல் உரக்கிடங்கில் Windrows platform–ல் Biomining முறையில் குப்பைகளை பிரித்தெடுத்து உரமாக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளது. எனவே Windrows platform–ல் சுற்றுசுவர் இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் வன விலங்குகள் உள்ளே வந்து விடுகிறது. எனவே windrows platform–ல் சுற்றுசுவர் அமைக்கவும். எலக்ரிகல் அறை அமைப்பதற்காக தரைத்தளம் உயர்த்தி சுற்றிலும் சுவர் அமைத்து பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13.00/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

**1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
**2. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**3. மேற்பர பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதினை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**


**தீர்மான எண்.2401 அனுமதிக்கப்பட்டது**

7. இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட சர்ச்ஹில் பகுதியில் சாகர் சாக்லேட் பேக்டரி முன்புறம் பொது நடைபாதையில் கடந்த 18.11.2020–ல் பெய்த கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டு நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே பொது மக்கள் நடைபாதையை கடக்க மிகவும் சிரமப்படுவதுடன் பாதுகாப்பற்ற சூழ்நிலையும் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி சாலை ஓரம் மண் அரிப்பு ஏற்பட்டு சாலை பழுதான நிலையில் உள்ளதால் விபத்து ஏதும் ஏற்படா வண்ணம் உடன் பணியினை மேற்கொள்ள வேண்டி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் தனி அலுவலர்அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.

தீர்மான எண்.2402 அனுமதிக்கப்பட்டது



ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
உதகமண்டலம் நகராட்சி.